## மூன்றாவது தேர்ச்சி : இறைகட்டளைகளைப் பின்பற்றுவதன் வழியாக மனித உறவுகளை வளர்த்துக் கொள்வர்

17

### 3.5. அயலவர் மட்டில் அன்பு



- நல்ல சமாரியன் உவமையில் வரும் பாத்திரங்களை ஏற்று நாம் நடிப்போம்.(லூக்.10:25-37)
- புனித லூக்கா காட்டியிருக்கும் நல்ல சமாரியன் உவமையின் அடிப்படையில் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.

- குழு 1 - கள்வர் கூட்டம்
- குழு 2 - குரு
- குழு 3 - லேவியர்
- குழு 4 - சமாரியன்

இவர்களில் ஒருவராக எம்மை இணைத்துக் கொண்டு கீழ்க்காணும் விடயங்களைப்பற்றி கலந்துரையாடுங்கள்.

1. எனக்கு வரும் சிந்தனை என்ன?
2. நான் ஏன் இப்படிச் செய்தேன்?
3. இந்த சிந்தனையும் செயலும் இறைவனுக்கு உகந்ததாக இருக்கின்றதா?

- இதனை அப்பியாசக் கொப்பியில் குறிக்கவும்.
- குழுக்களின் கருத்துக்களை ஏனைய குழுக்களுடன் பகிரவும்.

என்னுடையது என்னுடையதே
உன்னுடையது என்னுடையது

என்னுடையது என்னுடையதே
உன்னுடையது உன்னுடையதே

என்னுடையது உன்னுடையது
உன்னுடையது உன்னுடையது

- மேலே குறிப்பிடப்பட்டவை எக்குழுவினருக்குப் பொருந்தும்?
- இறைவனுக்கு உகந்த வகையில் செயற்பட்டவர் யார்?

பின்வரும் சந்தர்ப்பங்களில் நல்ல சமாரியனாகச் செயல்படக்கூடிய முறையை எழுதுக,

வீட்டில் ..................................................................................................

வகுப்பில் ................................................................................................

பாடசாலையில் .........................................................................................

பேருந்தில் ...............................................................................................

வீதியில் ..................................................................................................

விளையாட்டு மைதானத்தில் .......................................................................

பங்கில் ...................................................................................................

இறை வாழ்வு, அனைத்திற்கும் மேலாக இறைவனையும் தன்னைப்போல் அயலானையும் அன்பு செய்வதில் அடங்குகிறது. இந்த அன்பின் ஆற்றலை எந்தவொரு வல்லமையாலும் தடுத்து நிறுத்த முடியாது உண்மையான இறை பிள்ளைக்குள் இவ்வன்பு ஊற்றெடுக்கும்.

இறைவன் தமது அளவற்ற அன்பை எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை: ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். ஏனெனில் அவர்கள் கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை.

யோவான் 3:16-18

**செயற்பாடு :-**

- இறைவன் உலகை எவ்வாறு அன்பு செய்தார்?
- இயேசு எதற்காக இவ்வுலகிற்கு வந்தார்?
- நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நீர் என்ன செய்ய வேண்டும்?

சகோதர சகோதரிகளே, உங்களுள் ஒருவர் மற்றவரைப் பழித்துரைக்க வேண்டாம். தம் சகோதரர் சகோதரிகளைப் பழித்துரைப்போர் அல்லது அவர்களுக்குத் தீர்ப்பு அளிப்போர் திருச்சட்டத்தைப் பழித்துரைக்கின்றனர்: அச்சட்டத்துக்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கின்றனர். சட்டத்துக்கு எதிராக நீங்கள் தீர்ப்பு அளிக்கும்போது நீங்கள் அதைக் கடைப்பிடிப்பவராக அல்ல, மாறாக அதற்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கும் நடுவர்களாக ஆகிவருகிறீர்கள். திருச்சட்டத்தைக் கொடுத்தவரும் தீர்ப்பு அளிப்பவரும் ஒருவரே. அவரே மீட்கவும் அழிக்கவும் வல்லவர். அவ்வாறிருக்க உங்களை அடுத்திருப்பவருக்குத் தீர்ப்பளிக்க நீங்கள் யார்?

யாக்கோபு 4:11-12

இறைவனை அன்பு செய்யவேண்டும் இறைவனை அன்பு செய்தல் என்பது எமது அயலானை ஏற்றுக்கொள்வதாகும். அயலவரின் குறை நிறைகளுடன் அவர்களை மதித்து ஏற்று வாழப் பழக வேண்டும்.

## அன்பு

- தியாகம் நிறைந்தது
- கைமாறு எதிர்பாராதது
- அர்ப்பணிப்புள்ளது
- ஒதுக்கப்பட்டவரை வரவேற்கும்
- இன, மத, சாதி, நிற வேறுபாடின்றி ஏற்றுக்கொள்ளும்
- பகைவரை மன்னிக்கும்
- மனிதப் பண்புகளை மதிக்கும்
- மற்றவரைப் பழித்துரைக்காது

நல்ல சமாரியனைப் போல எம்மிடமுள்ளவற்றை அடுத்தவருக்கு வழங்கி அவர்களது இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொள்ள வேண்டும்.

என்னுடையது உன்னுடையதே
உன்னுடையது உன்னுடையதே

என்ற பகிர்ந்து வாழும் மன நிலையுடன் பொதுப் பொருளாகக் கொள்ளும் அன்பிய வாழ்வுக்கு எம்மைத் தயாராக்குவோம்.

## சிந்திப்போம்

**உண்மையான அயலவராக நான் மாற**

- தாழ்ச்சியைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- இரக்கம் காட்டவேண்டும்.
- எமது கௌரவத்தை விட்டுக்கொடுக்க வேண்டும்.
- எமது ஆற்றல், சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டும்.
- அயலவர்களுக்குப் புதுவாழ்வு கொடுக்க வேண்டும்.
- பொருளை மட்டுமல்ல மற்றவரின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அயலவரின் துயர் துடைக்கும் கருவிகளாக எம்மை மாற்றுவோம்.
- எமக்குத் தரப்பட்டிருக்கும் ஆவியின் வரங்களைக் கொண்டு அயலவர்களை மகிழ்விப்போம்.

என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச்சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எல்லாவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்; என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்.

யாக். 2:14-17

- வார்த்தைகளால் அல்ல எமது வாழ்வினால் மற்றவர்களை வாழச் செய்தல்.
- எமது விசுவாசம் செயலூக்கம் உள்ள விசுவாசமாக அமையவேண்டும்.

## செயற்பாடு :-

1. செயலூக்கம் நிறைந்த விசுவாச வாழ்வை எவ்வாறு வாழலாம் என எழுதிக் காட்டவும்.
2. இறைவனை அறியாத சமூகத்தினருக்கு இறைவனை அறிமுகம் செய்வதற்காக நீர் மேற்கொள்ளும் வழிமுறையை எழுதவும்.
3. கீழ்க்காணு ம் சந்தர்ப்பங்களில் நீர் என்ன செய்வீர்?

- வயது முதிர்ந்த பாட்டி அல்லது தாத்தா விழுந்து கிடக்கும் போது
- வலது குறைந்த ஒருவர் செயற்பட முடியாமல் தவிக்கும் போது
- திக்குவாயன் ஒருவன் என்னிடம் உரையாடும் போது
- என்னை மற்றவர் புறக்கணித்து ஒதுக்கி விடும்போது

**வாழ்க்கைக்கு**

கண்ணால் காணும் என் சகோதரனை
அவனது குறைநிறைகளோடு
ஏற்று இறை விருப்பத்தை
நிறைவு செய்வோம்.
(1 யோவான் 2:6)